# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 26 புதன்கிழமை 10.07.2024 கதிர் 296







# அதிபர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்கவேண்டும் தவறுகின்ற பட்சத்தில் நாட்டின் கல்வித்துறையில் பாதிப்பு ஏற்படும்!

## என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சபையில் தெரிவிப்பு

பாடசாலை அதிபர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வினை முன்வைக்கத் தவறும் பட்சத்தில் நாட்டின் கல்வித்துறையில் பாரிய பாதிப்பு ஏற்படும்!, என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றியபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கல்வித்துறையில் இன்று பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. பொல்துவ சந்தியில் இன்றும் அதிபர் ஆசிரியர்கள் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நாட்டில் சுமார் 12,000 முதல் 13,000 பாடசாலை அதிபர்கள் உள்ளனர். கொடுப்பனவு, போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட பலகோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சியாக அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2➤






## அதுருகிரிய துப்பாக்கிச்சூட்டுச் சந்தேகநபர்கள் இந்தியாவுக்குத் தப்பிச்செல்ல முயற்சியாம்!

### ரகசிய தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிப்பு

அதுருகிரிய பிரதேசத்தை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச் செல்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக குற்றப்புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துருகிரிய பிரதேசத்தில், கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 55 வயதுடைய பிரபல தொழிலதிபரான கிளப் வசந்த என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவும், 38 வயதுடைய நபரொருவரும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் பிரபல பாடகியான கே.சுஜீவா உட்பட

2➤

## ஆசிரியர் – அதிபர் வேலை நிறுத்தம் வெற்றி! தொழிற்சங்க பிரதிநிதி ஸ்டாலின் தெரிவிப்பு

### கல்விச் சுமையை பெற்றோர்கள் மீது சுமத்துவதற்கும் எதிர்ப்பாம்

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் வேலைநிறுத்தம் காரணமாக லட்சக்கணக்கான பாடசாலை மாணவர்கள் கல்வி கற்காமல் வெறுமனே வீடு திரும்பியதை காண முடிந்தது.

மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதி தொடர்பில் பல பெற்றோர்கள் விசனம் வெளியிட்டதுடன் கொழும்பு உள்ளிட்ட சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால் மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபட்டதை காணமுடிந்தது.

இதேவேளை, வடகிழக்கு உட்பட

2➤



## ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான கால அவகாசம் தொடர்பாக விவாதம்!

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான கால அவகாசம் தொடர்பாக நாளை நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளை விவாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றின் பதவிக்காலம் தொடர்பாக இலங்கை அரசியல் யாப்பில் நிலவும் தெளிவின்மையை சீராக்க அமைச்சரவை இன்று அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், அரசியல் யாப்பில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றின் பதவிக் காலம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள '

2➤

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கி

கொடுத்த வாக்குறுதிக்கமைய சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கி வழங்கி வைக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விபத்து மற்றும் சத்திர சிகிச்சைகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளுக்கான மின்சார மாற்றீடுகள் இல்லாத நிலை தொடர்பில் கடந்த சில நாட்களாகப் பேசப்பட்டு வந்தது.

குறிப்பாக, வைத்தியசாலையில் கடமையாற்றி, தற்போது விடுமுறையில் உள்ள பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா இதுதொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அதனடிப்படையில், மேலதிக மின்பிறப்பாக்கியின் அவசியத்தை கருத்தில்கொண்டு வைத்தியசாலைக்கு தற்காலிக அடிப்படையில் அதனை பெற்றுக்கொடுப்பதாக கடந்த 7ஆம் திகதியன்று உறுதியளித்திருந்தேன்.

அவ்வாக்குறுதிக்கமைய, 150 கிலோவாற் வலுவுடைய மின்பிறப்பாக்கியொன்று தற்காலிக அடிப்படையில் இன்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த மின்பிறப்பாக்கியை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது, நிரந்தர மின்பிறப்பாக்கியைப் பெற்று வைத்தியசாலையில் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும்,

2➤



## அதிபர்களின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாடசாலை அதிபர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வினை முன்வைக்கத் தவறும் பட்சத்தில் நாட்டின் கல்வித்துறையில் பாதிப்பு ஏற்படும்.

கல்வி அமைச்சர் உடனடியாக பாடசாலை அதிபர்களின் கோரிக்கைகளுக்கு சாதகமான தீர்வினை வழங்க முன்வர வேண்டும்.

அதாவது, அதிபர் ஒருவருக்கு அவர்களின் தர நிலைக்கேற்ப பதவி உயர்வு வழங்கப்படும்போது அவர்களின் அடிப்படைக் கொடுப்பனவு 3000 முதல் 6000 ரூபா வரை குறைவடைகின்றது. இது ஒரு பாரதூரமான பிரச்சினையாகும்" என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றைய தினம் பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 302 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ஷரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கம்பஹா, களனி, சிங்காரமுல்ல களனி மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோதும் அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியிருந்தார். அங்கு உரையாற்றிய அவர், கல்விசார ஊழியர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், ஆசிரியக் கல்வியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வித்துறை நிர்வாகிகள்

என 7 பிரிவினர் கல்வித்துறையில் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கோவிட் காலப்பிரவில் இணைவழி கல்வியின் போது ஆசிரியர்களே மாணவர்களுக்கு இணையதள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். ஏழ்மையான மாணவர்களுக்கு போதிய உணவில்லாத சமயங்களில் அவர்களுக்குத் தேவையான உணவைக் கொடுக்கும் சிறந்த கல்வி

முறையும் எமது நாட்டில் காணப்படுகிறது.

இந்த கல்வித்துறையில் பணியாற்றி வரும் மனித வளத்துக்கு நல்ல மன திருப்தி இருக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் பாடசாலை முறையை கட்டியெழுப்ப முடியாது.

கல்வித்துறையில் பணியாற்றி வரும் தரப்பினர் பல்வேறு முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நாட்டின் இலவசக் கல்வியில் 10,096 பாடசாலைகள், 41 இலட்சம் மாணவர்கள், 12,000 தொடக்கம் 14,000 வரையிலான அதிபர்கள், 254,000 ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்வித்துறை நிர்வாகிகள் போன்ற துறைகளில்

ஈடுபட்டு வரும் அனைவரினதும் பிரச்சினைகள் முறையாகத் தீர்க்கப்பட வேண்டும்.

அவ்வாறு மேற்கொள்ளாவிட்டால் எமது நாட்டின் கல்வி முறை வீழ்ச்சியடையும்.

இந்தப் பணத்தில் பாடசாலைகளுக்கு வளங்களை வழங்காமல் வேறு விடயங்களைச் செய்யலாம் என்று பல்வேறு தரப்பினரும் கூறுகின்றனர்.

பிள்ளைகளுக்கு நல்லதையே சொல்ல வேண்டும் என்ற கருத்து யதார்த்தமாக இருந்தால்,

அதை செயல் ரீதியாக முன்னெடுப்பது நமது பொறுப்பாகும். கல்வி என்பது அடிப்படை உரிமை என்றபடியால், அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

எமது நாட்டின் கல்வி முறையில் பல பாடப் பிரிவுகளில் சிக்கல்கள் நிலவிவருகின்றன.

கலைப் பிரவுப் பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் வேலை வழங்கப்படாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, யார் எதிர்த்தாலும், ஆங்கில மொழியை மையமாகக் கொண்ட கல்வியை நோக்கிச் செல்ல வேண்டும்.

சுயநல அரசியல் இலக்குகளை முன்னிறுத்தியே சிங்களம், தமிழ் என்று சொல்லி ஆங்கில மொழிக் கல்வியை புறம்தள்ள முயற்சிக்கின்றனர்.

தற்போது பல தரப்பினரும் சம்பள அதிகரிப்பு கோரிக்கையை விடுத்து வருகின்றனர். சம்பளத்தை அதிகரித்தால் வற் வரியை அதிகரிக்க வேண்டி ஏற்படும் என்று அரசு பதிலளித்துள்ளது.

இப்படியான நிலையில், இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கு நிதி எங்கிருந்து கிடைக்கிறது என கேள்வி எழுப்புபவர்களுக்கு, சம்பிரதாய கட்டமைப்பிற்கு அப்பால் சென்று தீர்வுகளைத் தேடினால் நிதியை பெற்றுக்கொள்ள முடியும். இதனால் தீர்வுகளையும் எட்ட முடியும். இதற்கு பல வெற்றிகரமான வழிமுறைகள் காணப்படுகின்றன என்று, குறிப்பிட்டிருந்தார். (04)

## அதுருகிரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக நம்பப்படும் பச்சைகுத்தும் நிலையமொன்றின் உரிமையாளர் உட்பட 7 சந்தேக நபர்கள் இதுவரையில் மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச் செல்ல உள்ளதாக புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து மன்னாருக்குச் செல்லும் பிரதான பாலத்தடியில் விசேட இராணுவ சோதனைச் சாவடியொன்று தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக வேறு மாவட்டங்களில் இருந்து மன்னாரிற்குள் நுழைகின்ற சந்தேகத்திற்கு இடமான வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதான பாலத்தடியில் சில வருடங்களாக நிலைகொண்டிருந்த இராணுவத்தினரின் சோதனைச் சாவடி கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அகற்றப்பட்ட நிலையில், மீண்டும் புதிதாக சோதனை சாவடியொன்று அமைக்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## ஆசிரியர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் நேற்று சுகயீன விடுமுறையின் கீழ் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பு 100 வீதம் வெற்றியடைந்துள்ளது என ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பிரதிநிதி மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் சம்பளத்தில் மூன்றில் இரண்டு பங்கை வழங்காமல் காலம் தாழ்த்துதல், கல்விச் சுமையை பெற்றோர்கள் மீது சுமத்துதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளுக்கு அரசு தீர்வு காணாததை கண்டித்தே தாம் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் உரிய தீர்வை வழங்காவிட்டால், எதிர்காலத்தில் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்த ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காமல் அரசு அடக்குமுறையை கடைபிடித்தால், அதற்கு எதிராக கடுமையான தொழிற்சங்க மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெஜ-27)

## ஜனாதிபதித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆறு ஆண்டுகளுக்கு மேல்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் என்ற சொற்றொடரை இணைக்க ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (04)

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கான அறையொன்றை அமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாகவும் வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் தெரியப்படுத்தியுள்ளார்.

மின்பிறப்பாக்கி கையளிப்பு நிகழ்வில், சாவகச்சேரி பிரதேச இணைப்பாளர் டுபாகரன், சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட எனது வட்டாரப்பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி மக்களின் தேவையுணர்ந்து எனது வேண்டுகோளை ஏற்று இந்த மின்பிறப்பாக்கிக்கான அனுசரணை வழங்கிய அன்பர்களுக்கு சாவகச்சேரி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்" - என்றார். (05)

# ஜனாதிபதித் தேத்தலில் ரணிலுக்கே என் ஆதரவு!

### இராஜாங்க அமைச்சர் லொஹான் தெரிவிப்பு

*"கட்சி குறித்து சிந்திக்கும் நேரம் இதுவல்ல. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்குவேன்." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் கூறியபோது -*

*"நாட்டை மீட்டெடுத்த, சிறந்த வேலைத்திட்டம் உடைய, வாய்ச்சொல் வீரர் அல்லாத சிறந்த தலைவருக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவேன். எனவே, நாட்டு மக்களும் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் முடிவையே எடுப்பார்கள் என நம்புகின்றேன்.*

*கட்சி பேதமின்றி இலங்கை பற்றி சிந்தித்து மக்கள் வாக்களித்தால் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவார். இது கட்சி குறித்து சிந்திக்க வேண்டிய நேரம் அல்ல. தற்போது நாடு பற்றியே சிந்திக்க வேண்டும். தனிப்பட்டவர்களின் நலன் பற்றி சிந்திக்கக் கூடாது.*

*ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பது நாமல் ராஜபக்ஷ, சாகர காரியவசம் போன்றோருக்கு உரித்தானது அல்ல. அது பலமான அமைப்பு. கூட்டு முடிவுகளே எடுக்கப்பட வேண்டும்." - என்றார்.*

*(05)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com





# கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய புனராவர்த்தன கும்பாபிசேகம்

கிளிநொச்சி அருள் மிகு கந்தசுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிசேகம் சிங்கல லக்கினமும் மக நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபவேளையாகிய 9.02 மணி முதல் 10.31 மணி வரையா சுபமுகூர்த்த வேளையில் இராஜகோபுரத்திற்கு நடைபெற்றது.

அத்துடன், ஏனைய விமான ஸ்துாபிகளுக்கும் மூவாலய முருகப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற்றது.

# அட்டாளைச்சேனையில் உறுமய வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுப்பு



(எம் எப் நவாஸ்)

நாடு முழுவதும் 20 லட்சம் பூரண அளிப்புப் பத்திரங்களை வழங்கும் ஜனாதிபதி வேலைத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரதான கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதேச செயலாளர் பி டி எம் இர்பான் தலைமை தாங்கியதுடன், வருகை தந்த பொது மக்களுக்கு பூரண அளிப்பு தொடர்பான முழுமையான விளக்கங்களும் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நடமாடும் சேவையில் கலந்து கொண்டிருந்த பயனாளிகளில் பொருத்தமான விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இதற்கான அழைப்பு பத்திரம் வழங்கும் துரித வேலைத்திட்டம் தொடர்ச்சியாக பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத தக்கதாகும். இந்நிகழ்வில் காணி உத்தியோகத்தர் எம் ஐ எம்.ரியாத், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.ஜே. தேவானந்தன் மற்றும் காணிப்பிரிவு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# மிதி வெடி

அதிகார துஷ்பிரயோகம் எண்டுறது அதிகாரத்தில உள்ளவை தங்கட பதவியைப் பிழையாப் பாவிக்கிறது மட்டுமில்லைப் பாருங்கோ. நாட்டு மக்கள் எல்லாருக்கும் நியாயமாகக் கிடைக்க வேண்டியதை - சரியாப் பங்கிட்டு, சமமாகக் குடுக்க வேண்டியதைத் தனக்கும், தன்ர சொந்தம் - பந்தம் , சுற்றம் சூழல் எண்டு எடுத்தப்போட்டு மக்களுக்குப் "பெப்பே" காட்டுறதும் அதிகாரத் துஷ்பிரயோகம் தான்!

ரெண்டு மூண்டு வருசத்துக்கு முந்தி நாட்டில ஏற்பட்ட தண்ணித் தட்டுப்பாட்டுக்குப் பிறகு "மாற்று ஆற்றல்" பற்றிக் கடுமையாச் சிந்திக்கத் தொடங்கீற்றினம். சூரிய சக்தி, காற்று வலு எண்டு அங்க - இங்க எண்டு தெட்டந்தெட்டமாப் பேச்சடிபட்டாலும் அதுகளைப் பற்றிப் பெரிசாக் கணக்கெடுக்கேல்ல.

மின்சார உற்பத்தி தட்டுப்பாட்டால ஒவ்வொரு நாளும் மணிக் கணக்காப் புழுக்கத்துக்குள்ள கிடக்கேக்க தான் எல்லாருக்கும் உந்த "மாற்று சக்தி" பற்றி யோசிக்க வெளிக் கிட்டவை. ஏன் அரசங்கமே அதுக்குப் பிறகு தான் "மாற்று சக்தி"க்கெண்டு நிலைபேறான திட்டங்களைத் தயாரிச்சு, மக்களுக்கு அது கிடைக்க வேணும் எண்டு ஊக்கமும் குடுத்தது.

மக்கள் எண்டு சொன்னா அடித்தட்டு மக்கள் வரைப் பயன்பெற வேணும் எண்டு சொல்லி, எல்லாரும் எடுக்கக் கூடிய மாதிரி அரசாங்க வங்கிகளில கடனுக்கும் ஏற்பாடு செய்து குடுத்தது பாருங்கோ. ஆனா வழக்கம் போல அந்தத் திட்டத்திலயும் மேற்தர வர்க்கம் தான் இன்னும், இன்னும் உழைச்சுக் கொண்டு போகுதே தவிர அப்பாவிப் பொதுமக்கள் அப்பிடியே தான் இருக்கினம் பாருங்கோ.

வடக்கில - அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில வருசத்தில பெரும்பாலான நாள்கள் சூரிய ஒளிக்குப் பஞ்சமிருக்காது எண்டுறதால "ரூஃப் ரொப் சோலர்" திட்டத்தை ஊக்குவிக்கச் சொல்லி அரசாங்கம் ஆணை பிறப்பிச்சிருக்கு. அந்தத் திட்டத்தின்ர பிரதான நோக்கமே எடுக்கக் கூடிய எல்லா வீட்டுக்கும் "சோலர்" பூட்ட வேணும் எண்டது தான். அதாவது குடுக்கக் கூடிய இணைப்புகளை சரியா - சமமாகப் பங்கிட்டு குடுக்கிறது தானாம். ஆனா இங்க நடந்ததோ வேற, முதலில மின்சார சபையில வேலை செய்யிறவையிண்ட பதவி ஒழுங்குப்படி ஒவ்வொருத்தருக்கும் தேவைக் கதிகமா ஒதுக்கிப் போட்டு, மிச்சம் மீதியில அயலட்டை - அன்பர்கள், நண்பர்களுக்குக் குடுத்துப் போட்டு இப்ப அப்பாவிச் சனங்களுக்குக் கைவிரிக்கினமாம்.

ஒவ்வொரு வீட்டுக்கும் ஆகக் குறைஞ்சது 5 "கிலோ வற்" ஆவது பங்கிட்டுக் குடுக்காமல் மாசக்கணக்கா மூவாயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்காம். ஆனா 40 "கிலோ வற்" க்குக் குறைவாகச் "சோலர்" பூட்டாத மின்சாரசபை "என்ஜினியர்" வீடு எண்டு ஒண்டு மில்லையாம்!

அதில "ஆத்தில வருகுது அண்ணன் பிடி - தம்பி பிடி" எண்டு அயலட்டை - சுத்தம், பத்தத்திலையும் எல்லாருக்கும் குடுபட்டுக் கிடக்குது. அதில ஆயிரக்கணக்கில "கையூட்டும்" கைமாறி இருக்குதாம்.

"கனெக்சன்" கேட்டுச் சுன்னாகத்துக்குப் போனால் அங்க இதுக்கெண்டு ஒரு அலுவலர் "அசைன்" பண்ணுப்பட்டிருக்கிறாராம். பொதுமக்கள் தொடர்புக்கெண்டு தொலைபேசி இலக்கம் ஒண்டும் ஒதுக்கி, அதில கதைக்கிறதுக்கெண்டு கதிரைக்குப் பாரமா ஒரு பெண்ணையும் இருத்தியும் வைச்சிருக்கினம். ஆனா அந்த தொலைபேசிக்கு அழைப்பெடுத்தால் "ஆன்சர்" பண்ணுப்படாது. அங்கினேக்க எக்கில - தப்பில இடைப்புக் கிடைச்சிட்டாலும் "நேரா வாங்கோ" எண்டுட்டுப் பொத்தெண்டு வச்சிடுவினம். நேராப் போனால் அந்த "ஏஜெண்ட்" வந்து பேரம் பேசுவார். "டீல்" சரி வந்தால் "கிளியரன்ஸ்" கிடைக்கும். இல்லாட்டி பதிலேதுமில்லாமல் "பைஃல்" கிடப்பில போடுப்படும்.

இந்த "டீல்" விவகாரம், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து இணைப்பெடுத்தவை, அயலட்டை - சுற்றம் - சொந்தம் எல்லா விவரமும் போன கிழமை நாட்டை ஆளுறவரின்ர அலுவலகத்துக்குக் கிடைச்ச பிறகுதான் எல்லாம் வெளிச்சத்துக்கு வந்திருக்காம்..!

ஆரோ ஒரு யாழ்ப்பாணதார் தன்ர விண்ணப்பத்துக்கு என்ன நடந்ததெண்டு கேட்டு சுன்னாகம் அலுவலகத்துக்குப் "போஃன்" போட்டுக் கேக்க, அங்க இருந்தவா வழக்கம் போல கிரந்தம் விட்டிருக்கிறார். அந்த (அப்)பாவி அதை அப்பிடியே கொழும்பில இருககிற மின்சார சபையின்ர "ஜீ.எம்"க்கு முறைப்பட்டிருக்கிறார். முறைப்பாடு வேலை செய்ய, மே மாசம் 29 இல விண்ணப்பிச்சவருக்கு ஜூன் மாசம் 18 ஆம் திகதி தொலைபேசியில கூப்பிட்டு ஜூன் மாசம் 3 ஆம் திகதி "கிளியரன்ஸ்" குடுத்திட்டம் எண்டு கையெழுத்தும் வாங்கிக் கொண்டு, அந்த மனுசன் விண்ணப்பிச்சத விடக் குறைவா, விண்ணப்பிச்ச வகைய விட வேற வகை இணைப்புக்கு "கிளியரன்ஸ்" குடுத்திருக்கினம்.

ஏப்ரல் மாசம் குடுத்தவைக்கே மாசக்கணக்காகியும் இன்னும் "கிளியரன்ஸ்" குடுக்காதவை, ஜூன் 18 "ஜீ. எம்" க்கு முறைப்பாடு சொன்னவருக்கு ஜூன் 3 லேயே "கிளியரன்ஸ்" குடுத்திட்டினமாம். எப்பிடி இருக்குது பாத்தியளே பஞ்சாயத்து?

தான் "ஜீ.எம்"க்கு முறைப்பாடு குடுத்ததால தான் தனக்கு வேணுமெண்டே கேக்காத "கனெக்சன்" தந்திருக்கினம் எண்டு அந்தாள் திருப்பியும் முறைப்பட்டிருக்குது. அதுக்கு அந்த விளக்கம் - இந்த விளக்கம் எண்டு கடுமையா வகுப்பெடுத்து "ரெக்னிக்கல் எக்ஸ் கியூஸ்" காட்டியிருக்கினம்.

முருங்க மரத்தில ஏறின வேதாளம் போல அந்தாளும் விடுறதா இல்லை. ஆயிரக்கணக்கில காசு கேட்டதில இருந்து எந்த "என்ஜினியர்" வீட்டுக்கு எத்தின "கிலோ வற்" இணைப்புக் குடுத்திருக்கு, மிஞ்சின இணைப்புக்காக ஆரார், ஆருக்கு எவ்வளவு குடுத்தவை அதில "பிசினஸ்" காரர் எத்தின பேர், வங்கி ஆக்கள் எத்தினை பேர் எண்டு விலாவாரியாக் குறிப்பிட்டு ஜனாதிபதியின்ர செயலாளருக்குக் கையில குடுத்திட்டு வந்திருக்காம். போதாக்குறைக்குப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு, நிலைபெறுதகு வலு அதிகார சபை, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு எண்டு எல்லா இடத்திலையும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கு.

"தனக்கு இழைக்கப்பட்டது அநீதி - இனித் தனக்கு "கிளியரன்ஸ்" கிடைக்காட்டிலும் (இதுக்கு மேலயும் தருவினம் எண்டு எதிர்பார்க்க ஏலுமே?) இன்னுமொரு இலங்கைக் குடிமகனுக்கு இப்பிடி நடக்க விடாதேங்கோ" எண்டது தானாம் முறைப்பாட்டின் உச்சபட்ச வேண்டுதல்.

இப்பிடித் தானுங்கோ. எங்களுக்குள்ள முடிக்க வேண்டிய விசியங்களை மூண்டாந் தரப்பாரிட்டைக் கொண்டு போய்த் தான் முடிக்க வேண்டிக் கிடக்கு. ஏற்கனவே நான் சொன்ன சில சம்பவங்கள ஞாபகப்படுத்திப்பாருங்கோ..

கால் ஏலாத அந்த முன்னாள் போராளிப் பிள்ளைக்கு "மோட்டார் சைக்கிள் லைசென்ஸ்" குடுத்தது. "ஒன்லைன் பாஸ்போர்ட்", "ஒன்லைன்" காணி உறுதி எண்டு அரசாங்கம் "அட்வான்ஸ்" ஆக அறிமுகப்படுத்திற அத்தனையையும் வடக்கில உள்ளவை உதாசீனப்படுத்திறதையும், அது ஜனாதிபதி செயலகம் வரைப் போன பிறகு பிகு பண்ணிச் செய்து குடுக்கிறதும் வழமையாப் போச்சு.என்னவோ எங்கட சீத்துவம் அங்கவரை தெரிஞ்சாத்தான் நாங்கள் வேலை செய்வம் எண்டால், ஆர் என்ன சொல்ல ஏலும்?

நரமுனி

# இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக கௌதம் கம்பீர் நியமனம்!



இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக கௌதம் கம்பீர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதனை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (பிசிசிஐ) உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயற்பட்டு வந்த ராகுல் ட்ராவிட்டின் பதவிக்காலம் ரி-20 உலகக் கிண்ணம் வரை நீடிக்கப்பட்டிருந்தது. அத்தொடருடன் அவரது பணிக்காலம் நிறைவடைந்திருந்தது.

இந்த நிலையில், இந்திய அணிக்கு புதிய தலைமைப் பயிற்சியாளராக யார் நியமனம் செய்யப்படுவார் என்கிற கேள்வி சில வாரங்களாகப் பேசுபொருளாக இருந்துவந்திருந்த நிலையில், கௌதம் கம்பீரை அந்தப் பதவிக்கு நியமனம் செய்திருப்பதாக பிசிசிஐ அறிவித்துள்ளது.

அதோடு இந்திய அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக செயற்பட்டு வந்த விக்ரம் ரத்தோர், பந்துவீச்சுப் பயிற்சியாளராக செயற்பட்ட பராஸ் மாம்ப்ரே மற்றும் களத்தடுப்பு பயிற்சியாளராக செயற்பட்ட டி. திலீப் ஆகியோரது பதவிக்காலங்களும் நிறைவடைந்திருப்பதாக தெரியவருகிறது.

கௌதம் கம்பீர் பயிற்சியாளராக நியமனம் செய்யப்பட்ட விடயத்தினை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளரான ஜெய் ஷா தன்னுடைய எக்ஸ் தளப் பக்கம் வாயிலாக உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

2027ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் வரை கௌதம் கம்பீருக்கான பதவிக்காலமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கௌதம் கம்பீர் இந்திய அணியுடன் இணைந்து பணியாற்றவுள்ள முதல் கிரிக்கெட் தொடராக இந்திய கிரிக்கெட் அணியின் இலங்கைச் சுற்றுப்பயணம் அமைகின்றது. இந்தச் சுற்றுப்பயணத்தில் தலா மூன்று போட்டிகள் வீதம் கொண்ட ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் இலங்கை - இந்திய அணிகள் விளையாடவுள்ளன. (04)



## உக்ரைனில் குழந்தைகள் மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் ரஷ்யா நடத்திய தாக்குதல்களில் பலர் பலியானதாகத் தகவல்!

### குற்றச்சாட்டை மறுத்தார் புடினின் செய்தித் தொடர்பாளர

உக்ரைனில் குழந்தைகள் மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் ரஷ்யா நேற்று நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்ததாகவும், 154 பேர் காயமடைந்தனார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைன் முழுவதும் 5 முக்கிய நகரங்களைக் குறிவைத்து ரஷ்யா இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

40 க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மூலம் ரஷ்யா சரமாரியாக நடத்திய தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்புகள், பொதுக் கட்டமைப்புகள் சேதமடைந்ததாக தனது சமூக ஊடகப் பதிவில் உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

ஸெலென்ஸ்கி பிறந்த நகரமான க்ரிவிரீயில் நடத்தப்பட்ட தாக்குதலில் மட்டும் 10 பேர் கொல்லப்பட்டதாகவும், 47 பேர் காயமடைந்ததாகவும் பிராந்திய அரசின் தலைவர் ஒலெக்ஸாண்டர் வில்குல் கூறியுள்ளார்.

தலைநகர் கீவில் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்ததாக அந்த நகர அதிகாரிகள் கூறினர். அந்த நகரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையிலும் தாக்குதல் நடத்தப்பட்டதாக நகர மேயர் விடாலி க்ளிட்ஷ்கோ கூறினார். இந்தத் தாக்குதலில் 7 சிறுவர்கள் உள்பட 16 பேர் காயமடைந்ததாக அவர் தெரிவித்தார்.

மருத்துவமனை வளாகத்தில் ரஷ்யாவின் கேஎச்-101 ரக ஏவுகணையின் சிதறல்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் ரஷ்யாவுக்கு எதிராகப் போர்க் குற்றச் சாட்டுகள் பதிவு செய்யப்படவிருப்பதாகவும் உக்ரைனின் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், உக்ரைனிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையில் தாங்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுவதை ரஷ்யா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இராணுவ இலக்குகளைக் குறிவைத்து மட்டுமே ஏவுகணைகளை வீசியதாகவும் அவற்றை இடைமறித்து அழிப்பதற்காக வீசப்பட்ட உக்ரைன் வான்பாதுகாப்பு ஏவுகணைகள் விழுந்தே அந்த மருத்துவமனை சேதமடைந்ததாகவும் ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடினின் செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ் கூறியுள்ளார்.

கீவ் நகரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையில் ரஷ்யா தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுவது தவறான தகவல். இந்த விவகாரத்தில் ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சம் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் மட்டுமே உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளில் பொதுமக்கள் வசிப்பிடங்கள் எதுவுமே கிடையாது. அவை அனைத்துமே உக்ரைன் ராணுவ கட்டமைப்புகள்தான், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (04)



## பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்த மலையேற்றவீரரின் உடல் 22 ஆண்டுகள் கழித்து கண்டுபிடிக்கப்பட்டது!

2002 ஆம் ஆண்டு பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்த அமெரிக்க மலையேற்ற வீரர் வில்லியம் ஸ்டாம்ஃபில்லின் உடல் 22 ஆண்டுகள் கழித்து கிடைத்துள்ளது.

2002 ஆம் ஆண்டு பனிச்சரிவில் சிக்கி உயிரிழந்த அமெரிக்க மலையேற்ற வீரர் வில்லியம் ஸ்டாம்ஃபில்லின் உடல் 22 ஆண்டுகள் கழித்து கிடைத்துள்ளது.

பனி மலைத் தொடரில் புதைந்த வில்லியமின் உடல் முழுவதும் பனிக்கட்டியால் உறைந்ததால் அவரது உடல் இயற்கையாகவே பதப்படுத்தப்பட்டுள்ளது. வெப்பத்தால் பனி உருகிய நிலையில் அவரது கடவுச்சீட்டை வைத்து அவரது உடல் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தென்னமெரிக்க நாடான பெருவில் சுமார் 22 ஆயிரம் அடி உயரம் கொண்ட '/ஹவாஸ்காரன்' மலை அமைந்துள்ளது. இந்த மலையில் கடந்த 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம், அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் ஸ்டாம்ஃபில் என்ற மலையேற்ற வீரர் பனிச்சரிவில் சிக்கி காணாமல் போயிருந்தார். நீண்ட நாட்களாக தேடியும் அவரை கண்டுபிடிக்க முடியாததால், தேடுதல் பணி கைவிடப்பட்டது.

இந்த நிலையில் 22 ஆண்டுகளுக்குப் பிறகு வில்லியம் ஸ்டாம்ஃபில்லின் உடல் /ஹவாஸ்காரன் மலையில் உறைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காவல்துறையினர் கூறுகையில், “அவரது உடல், உடைகள், மலையேற்றக் கருவிகள், காலணிகள் ஆகியவை பனியில் உறைந்து பதப்படுத்தப்பட்ட நிலையில் இருந்தன. அவரது உடைமைகளில் இருந்த கடவுச்சீட்டின் மூலம் வில்லியம் அவர் ஸ்டாம்ஃபில் என அடையாளம் காணப்பட்டார்” என்றனர்.

மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகளில் ஒருவரான லெனின் அல்வார்டோ கூறுகையில், ஸ்டாம்ஃப்பிலின் உடைகள் பெரும்பாலும் அப்படியே உள்ளன. அவரது வாகன ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய இடுப்புப் பையில் 2 சன்கிளாஸ்கள், கமரா, குரல் பதிவுக்கருவி, 2 சிதைந்த 20 டொலர் பில்களும் இருந்தன. ஒரு தங்க மோதிரமும் இடது கை விரலில் இருந்தது” என்றார்.

வில்லியம் ஸ்டாம்ஃப்பில் அவரது நண்பர்களான மத்யூ ரிச்சர்ட்சன், ஸ்டீவ் எர்ஸ்கைன் ஆகியோருடன் 2002 இல் ஹுவாஸ்காரன் மலையில் ஏறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அவர்கள் உலகம் முழுவதும் பயணம் செய்து கிளிமஞ்சாரோ, ரெய்னியர், சாஸ்தா மற்றும் தெனாலி சிகரங்களை அடைந்ததாக 2002 ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் பத்திரிகையின் அறிக்கை தெரிவிக்கிறது.

பனிச்சரிவுக்குப் பிறகு எர்ஸ்கினின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது வில்லியம் ஸ்டாம்ஃப்பில்லின் உடலும் கிடைத்துள்ளது. ஆனால், ரிச்சர்ட்சன் பற்றிய விபரங்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. (04)






# முஹர்ரம் புது வருட தேசிய நிகழ்வு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முஹர்ரம் ,ஸ்லாமிய புதுவருட நிகழ்வு கொழும்பு கிருலப்பனஜு/ம்ஆப் பள்ளிவாசலில் திங்களன்று (08) இடம்பெற்றது

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம்.ரிப்லான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் கொழும்பு ,ஹ்ஸானியா மதரஸாவின் அதிபர் அஷ்ஷேக் பாஷரூத் இஸ்லாமியப் புதுவருட முஹர்ரம் சிறப்புகள் குறித்து தமிழ்மொழியிலும், கொம்பனித்தெரு அஹதிய்யாப் பாடசாலை மாணவன் ஸமீம் நசார் சிங்கள மொழியிலும் உரையாற்றினர்.

கொம்பெனித் தெரு அஹதிய்யாப் பாடசாலையின் கஸீதா குழுவினர்களால் கஸீதா பாடப்பட்டது.

கிருலப்பன ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் ஸப்ரி ஜுனுஸினால் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்கவுக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஏ.எம்.ஹேரத், கிருலப்பன ஜும்ஆப் பள்ளிவாசலின் பிரதித் தலைவர் இம்தியாஸ் முஸ்தபாவினால் நினைவுச் சின்னம் வழங்கியும் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம்.ரிப்லான் பள்ளிவாசலின் தனதிகாரி ஸகீர் மர்ஸுக்கினால் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

கிருலப்பன ஜு/ம்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் அல்ஹாஜ் சப்ரி யூனுஸினால் நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அல் ஹாஜ் ஏ.எச்.எம்.பௌஸி, திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர்களான எம்.எஸ். அலா அஹமட், என்.நிலூபர், இலங்கை வக்ப் சபையின் உறுப்பினர்கள், ஹஜ் குழுவின் உறுப்பினர்களான ,ஷாக் ஹனிபா, ,ஃபாஸ் நபுகான் , கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், திணைக்கள நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் அஷ்ஷேக் முப்தி முர்சி உட்பட உலமாக்கள், மற்றும் திணைக்களத்தின் அதிகாரிகள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், ஊர் ஜமாஅத்தினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டு கழகத்தின் புதிய மேலங்கி அறிமுகம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் புதிய மேலங்கியை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு கழகத்தின் பொதுச் செயலாளர் ஏ.எம்.எம்.றஜி தலைமையில் மருதமுனை எம்.சி ரேஸ்ட் ,ன் வரவேற்பு மண்டபத்தில் ,ன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தனியார் உயர கல்வி நிறுவனத்தின் நிறைவேற்று முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர். எம்.எச்.எம்.முனாசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகத்திடம் புதிய மேலங்கியை கையளித்தார். இந்த நிகழ்வில் கழகத்தின் உயர் பீட உறுப்பினர்கள், கழக வீரர்கள், அபிமானிகள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன் போது யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு மேலங்கியை அன்பளிப்புச்செய்த சமூக சேவையாளர் டாக்டர்.எம்.எச்.எம்.முனாசிக் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

# சேவை நலன்பாராட்டு விழா



(எம்.ஏ.றமீஸ்)

கடந்த 34 வருட காலமாக கல்விச் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) உதவி அதிபர் ஏ.எம்.நபீலின் சேவையினைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது ஓய்வு பெற்றுச் செல்லும் உதவி அதிபர் ஏ.எம்.நபீல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான என்.எம்.எம். சாலிஹ், ஏ.எல்.நசீபா, உதவி அதிபர்களான எம்.ஐ.எல். ஜாபீர், எம்.சம்ஸ் றபா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த 34 வருட காலமாக ஆசிரியர் சேவையில் தன்னை அர்ப்பணித்து கல்விச் சேவை புரிந்து வந்த ஏ.எம்.நபீலின் சேவையினைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், நினைவுப் பரிசில்கள் மற்றும் வாழ்த்துப் பத்திரங்களும் அவருக்கு கையளிக்கப்பட்டன.

இதேவேளை, இவரது சேவையினை எடுத்தியம்பும் வகையில் பலரது உரைகள் இடம்பெற்றதுடன், கலை கலாசார நிகழ்வுகளும் இதன்போது மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஓய்வுபெற்றுச்செல்லும்ஏ.எம்.நபீல்,இப்பாடசாலையில் முதல் நியமனம் பெற்று தனது ஆசிரியர் சேவையினை செவ்வனே செய்து மாணவர்களின் அடைவு மட்டத்தினை மேம்படுத்த உதவியதுடன், இப்பாடசாலையின் உதவி அதிபராக சேவையாற்றி பாடசாலையின் சிறந்த நிருவாகத்திற்கும் தன்னலமற்ற சேவையினையும் வழங்கியிருந்தார், என உரையாற்றியவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன், அக்கரைப்பற்று லீடர் அஷ்ரஃப் கனிஷ்ட கல்லூரியின் அதிபராகவும் குறிப்பிட்ட சில காலம் இவர் தனது சேவையினை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# மேல் மாகாணத்தில் முச்சக்கர வண்டி கட்டணத்தில் ஜூலை 15 முதல் மாற்றம்

## முதலாவது கிலோமீட்டருக்கு ரூ.100 - அடுத்து ரூ.90

மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில்முறை முச்சக்கரவண்டிகள் ஜூலை மாதம் 15ஆம் திகதி நள்ளிரவு முதல் முதலாவது கிலோமீட்டருக்கு ரூ. 100 மற்றும் 2 ஆவது கிலோமீட்டரிலிருந்து ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் ரூ. 90 ரூபாய் எனும் ரீதியில் கட்டணம் அறவிட வேண்டும் என மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் ஓ.டபிள்யூ. பிரசன்ன சஞ்சீவ, நேற்று (9) பத்தரமுல்லை ரன்மகபாயவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

விலை மதிப்பாய்வுக் குழுவின் முடிவின்படியே இது செயல்படுத்தப்படுவதாக குறிப்பிட்ட அவர், தற்போது மேல் மாகாணத்தில் 2500 முச்சக்கர வண்டிகள் போக்குவரத்து அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட முச்சக்கர வண்டிகள் உள்ளதாகவும், அவற்றில் 30,000 முச்சக்கர வண்டிகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவையும் விரைவில் பதிவு செய்யப்படும் எனவும் தெரிவித்த அவர், மக்களுக்கு தரமான முச்சக்கரவண்டி சேவையை வழங்குவதே அதிகார சபையின் நோக்கம் எனவும் குறிப்பிட்டார்.

மேல்மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் முச்சக்கரவண்டிப் பணியகத்தின் தலைவர் ஜீவிந்த கீர்த்திரத்ன இங்கு உரையாற்றுகையில், மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்து முச்சக்கர வண்டிகளும் இந்த வருட இறுதிக்குள் பதிவு செய்யப்படுவது கட்டாயமாகும், எந்தவொரு முச்சக்கர வண்டி ஓட்டுனரும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணத்தை அறவிட்டால் அது குறித்து புகார் செய்ய முடியும். பதிவு செய்யப்படாத முச்சக்கர வண்டிகள் விடயத்தில் காவல்துறையுடன் இணைந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளில் பயணிக்கும் போது ஏதேனும் அநீதி ஏற்பட்டால் 0760-450860 என்ற எண்ணில் வட்ஸ்அப் செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது. இந்த செய்தியாளர் மாநாட்டிற்கு மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளர் ஜகத் பெரேரா மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(ரெஜ-24)

# மூன்று கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 2900 கிலோ பீடி இலைகளுடன் மூன்று சந்தேக நபர்கள் மன்னாரில் கைது

## இந்தியாவிலிருந்து மீன்பிடி படகு மூலம் கொண்டு வரப்பட்டவையாம்

மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான 2900 கிலோ பீடி இலைகளுடன் மூன்று சந்தேக நபர்களை மன்னார் பொலிஸார் கடந்த 8 ஆம் திகதி கைது செய்துள்ளனர். 80 பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டிருந்த இந்த பீடி இலைகளை மன்னார் கடற்கரையிலிருந்து மன்னார் நகருக்கு எடுத்துச் செல்வதற்காக வந்திருந்ததாக சந்தேகிக்கப்படும் லொறியொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மீன்பிடி படகு மூலம் இந்தியாவிலிருந்து மன்னாருக்கு கொண்டு வரப்பட்ட இந்த பீடி இலைகள், மன்னாரில் உள்ள கடத்தல்காரர்களால் நகர் பகுதிக்கு கொண்டு செல்வதற்கு தயாராக இருந்தன.

இது குறித்து கடற்படையினருக்கு தகவலொன்று கிடைத்திருந்தது. உடனே இந்த விடயம் கடற்படை ஊடாக மன்னார் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்தே மேற்படி கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பாரிய அளவில் வர்த்தகத்தில் ஈடுபடும் ஒருவரிடம் கூலிக்கு வேலை செய்கின்ற மூவரையே இவ்வாறு கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ள மன்னார் பொலிஸார், இந்தியாவிலிருந்து மன்னாருக்கு இந்த பீடி இலைகளை கடத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ள பிரதான சந்தேக நபர் குறித்தான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பீடி இலைகள் மற்றும் லொறி உட்பட சந்தேகநபர்கள் மூவரையும் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த மன்னார் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ரெஜ-26)






# பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு நீதிகோரி கவனவீர்ப்புப் போராட்டம்




(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க கோரிய கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று இடம் பெற்றது.

இதனை கிளிவெட்டி தங்க நகர் பகுதி சமூக மட்ட அமைப்புக்கள் பொது மக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

அண்மையில் நடேஸ் குமார் வினோதி எனும் யுவதி கொலை செய்யப்பட்டு கிணற்றினுள் சடலமாக மீட்கப்பட்டார். இதனை கண்டித்து அப்பகுதியினர் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். குறித்த கொலையினை மேற்கொண்டவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும், பிணை வழங்கக் கூடாது! போன்ற விடயங்களை முன்வைத்து அவர்கள் கவனவீர்ப்பை முன்னெடுத்தனர். பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

# மருதமுனை மக்கள் மண்டபம் விரைவில் மக்கள் பாவனைக்கு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கடந்த பல வருடங்களாக பாழடைந்து காணப்படுகின்ற மருதமுனை மக்கள் மண்டபத்தை விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கு கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அண்மையில் கல்முனை மாநகர ஆணையாளராக பொறுப்பேற்று ஒரு சில தினங்களிலேயே இந்த மண்டபத்தினதும் அதன் சுற்றுச்சூழலினதும் அவல நிலையை கவனத்திற் கொண்ட அவர், அதனை உடனடியாக சீர்செய்து, மக்கள் பயன்பாட்டுக்கு விடுவதற்கு தீர்மானித்திருந்தார்.

இதற்கு அமைவாக குப்பை கூளங்களாலும் காடு வளர்ந்தும் காணப்படுகின்ற மருதமுனை மக்கள் மண்டப வளாகம், கடந்த சில தினங்களாக கல்முனை மாநகர சபையினால் துரிதமாக துப்பரவு செய்யப்பட்டு வருகின்றது.

இதனை பராமரிப்பதற்கென ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் விரைவாக இதனை மக்கள் பாவனைக்கு விடுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.07.2024இல் வெளியிடப்பெற்றது.